بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

இதழ் 48

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

30 ரபீவுல் அவ்வல் 1441 ஹிஜ்ரி கமரி 28 நுபுவ்வத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
28 நவம்பர் 2019

## அல்லாஹ்வின் கட்டளை

وَلَئِنۡ قُتِلۡتُمۡ فِیۡ سَبِیۡلِ اللّٰہِ اَوۡ مُتُّمۡ لَمَغۡفِرَۃٌ مِّنَ اللّٰہِ وَرَحۡمَۃٌ خَیۡرٌ مِّمَّا یَجۡمَعُوۡنَ ○ وَلَئِنۡ مُّتُّمۡ اَوۡ قُتِلۡتُمۡ لَاِالَی اللّٰہِ تُحۡشَرُوۡنَ ○

நீங்கள் அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட்டால் அல்லது மரணமடைந்தால் நிச்சயமாக அல்லாஹ்வின் (இடமிருந்து உங்களுக்குக் கிடைக்கக்கூடிய) மன்னிப்பும், அருளும் அவர்கள் சேர்த்து வைக்கும் பொருள்களை விட மிகச் சிறந்ததாகும். நீங்கள் மரணமடைந்தால் அல்லது கொல்லப்பட்டால் நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்விடமே ஒன்று சேர்க்கப்படுவீர்கள். (3:158,159)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நஃப்ஸே அம்மாரா (தீமை செய்யத் தூண்டும் ஆன்மா) என்ற நிலையில் மனிதன் ஷய்த்தானின் அடிமையாக இருக்கின்றான். மேலும் லவ்வாமா (குற்றம் சாட்டும் ஆன்மா) என்ற நிலையில்  ஷய்த்தானுடன் அவனுக்கு போர் செய்ய வேண்டியது வருகின்றது. சில நேரங்களில் அவன் வெற்றி பெறுகின்றான். சில நேரங்களில் ஷய்த்தான் வெற்றி பெறுகின்றான். ஆனால் முத்மயின்னா (சாந்தியடைந்த ஆன்மா) என்ற நிலையை ஒரு அமைதி மற்றும் நிம்மதியை கொண்டதாக இருக்கின்றது. அதாவது அவன் நிம்மதியாக இருக்கின்றான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### சாந்தியடைந்த ஆன்மாவை அடையாமல் மனிதனால் இரட்சிப்பைப் பெற முடியாது

நான் சில மனிதர்களைப் பார்த்துள்ளேன். மேலும் பலரது நிலைமைகளைப் படித்துள்ளேன். அதாவது அவர்களிடம் உலகத்தில் செல்வ செழிப்பையும், உலகத்தின் பொய்யான இன்பங்களையும் மேலும் எல்லா விதமான அருட்களையும், பிள்ளைகளையும் பெற்றிருந்தனர். ஆனால் அவர்கள் மரணமடையும்போது இந்த உலகையும், இந்தப் பொருட்களையும்  விட்டு விட்டுச் சென்று, இன்னொரு உலகத்திற்கு செல்ல இருக்கின்றோம் என்பது பற்றிய ஞானம் அவர்களுக்கு வந்தபோது, அவர்களிடம் எவ்வித பயனும் இல்லாத இந்த விருப்பங்களின் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்தது. மேலும் அவர்கள் தம்மைத்தாமே குற்றம்சாட்டினர்.

ஆக இதுவும் ஒருவிதமான நரகம் ஆகும். அதனால் மனிதர்களின் உள்ளத்தில் நிம்மதியை ஏற்படுத்த முடியாது. மாறாக, அது பதற்றத்தின் நிலையில் ஆழ்த்தி விடுகின்றது.

எனவே இந்த விஷயமும் எனது நண்பர்களின் பார்வையில் மறைவானதாக இருக்கக்கூடாது. அதாவது பெரும்பான்மையான நேரங்களில் மனிதன் தனது குடும்பம் மற்றும் செல்வத்தின் மீது கொண்ட ஆகுமானதற்ற அன்பின் காரணமாக அதில் மூழ்கி விடுகின்றான். மேலும் பெரும்பான்மையான நேரங்களில் இந்த அன்பு, ஆர்வம் மற்றும் போதையின் காரணமாக எத்தகைய பணிகளைச் செய்து விடுகின்றான் என்றால் அவனுக்கும் இறைவனுக்கும் இடையில் ஒரு திரையை ஏற்படுத்தி விடுகின்றான். மேலும் தமக்கே ஒரு நரகத்தை உருவாக்கி விடுகின்றான். மேலும் அவன் இவை அனைத்தையும் விட்டு விட்டு தன்னந்தனியாக ஆக்கப்படுவான் என்ற அறிவு அவனுக்கு இருப்பதில்லை. அந்த நேரத்தைப் பற்றி அவன் அறியாதவனாக இருக்கின்றான்.

இந்த விஷயத்தை நாம் மிக எளிதாக புரிந்து கொள்ள முடியும். அதாவது எந்தப் பொருளை நாம் அதிகமாக நேசிக்கின்றோமோ, அதை விட்டுவிட்டு நாம் தன்னந்தனியாக செல்லும்போது ஒரு துன்பமும், கடுமையான  கவலையும் நமக்கு ஏற்படுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்:

نَارُ اللّٰهِ الۡمُوۡقَدَةُ ۙ الَّتِیۡ تَطَّلِعُ عَلَی الۡاَفۡـِٕدَةِ

அதாவது அது அல்லாஹ்வால் எரியச் செய்யப்பட்ட நெருப்பாகும். அது உள்ளங்களில் பாய்ந்து செல்லும். (104:7,8)

ஆக இது அல்லாஹ் அல்லாதவற்றின் மீது கொண்ட அன்பின் நெருப்பாகும். அது மனிதனின் உள்ளங்களை எரித்து சாம்பலாக்கி விடுகிறது. மேலும் ஒரு பெரும் தண்டனையிலும், வேதனையிலும் அவனை ஆழ்த்தி விடுகின்றது.

எனவே நான் மீண்டும் கூறுகின்றேன்: இது முற்றிலும் உண்மையான மற்றும் உறுதியான விஷயமாகும். சாந்தியடைந்த ஆன்மாவை அடையாமல் மனிதனால் இரட்சிப்பைப் பெற முடியாது.

நான் இதற்கு முன்பும் கூறியுள்ளேன். அதாவது நஃப்ஸே அம்மாரா (தீமை செய்யத் தூண்டும் ஆன்மா) என்ற நிலையில் மனிதன் ஷய்த்தானின் அடிமையாக இருக்கின்றான். மேலும் லவ்வாமா (குற்றம் சாட்டும் ஆன்மா) என்ற நிலையில் ஷய்த்தானுடன் அவனுக்கு போர் செய்ய வேண்டியது வருகின்றது. சில நேரங்களில் அவன் வெற்றி பெறுகின்றான். சில நேரங்களில் ஷய்த்தான் வெற்றி பெறுகின்றான்.

ஆனால் முத்மயின்னா (சாந்தியடைந்த ஆன்மா) என்ற நிலையை ஒரு அமைதி மற்றும் நிம்மதியைப் கொண்டதாக இருக்கின்றது. அதாவது அவன் நிம்மதியாக இருக்கின்றான்.

எனவேதான் இந்த கடைசி நிலைமையில் அவனுக்கு எந்த அளவுக்கு நிம்மதி கிடைக்கின்றது என்பது يٰٓاَيَّتُهَا النَّفۡسُ الۡمُطۡمَئِنَّةُ என்ற இந்த வசனத்திலிருந்து தெளிவாக தெரிய வருகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 95,96 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அனைத்து முன்னேற்றங்களின் ஆணி வேரும் தொழுகையே ஆகும். எனவேதான் நம்பிக்கையாளர்களின் ஏணிப்படி தொழுகை என்று கூறப்பட்டுள்ளது. (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**தொழுகையை முறையாக பேணுபவரே நம்பிக்கையாளர் ஆவார்**

**அல்லாஹ்விடம் கேட்பதற்கும் சில வழிமுறைகள் இருக்கின்றன. அதன்படி செயல்பட வேண்டியது வரும்**

**தொழுகையானது உருக்கத்துடனும், உளப்பூர்வமாகவும் செய்யப்படுவதே ஆகும்**

**மிகச்சிறந்த துஆ, சூரா ஃபாத்திஹா ஆகும்**

**சிறிய மற்றும் பெரிய தேவைகள் அனைத்தையும் எவ்வித வெட்கமுமின்றி இறைவனிடம் கேளுங்கள். ஏனென்றால் வழங்கக்கூடியவன் அவனே ஆவான்**

**வெறும் துஆ செய்வதனால் மட்டும் ஒன்றும் ஆகிவிடாது. மாறாக அத்துடன் முயற்சியும் செய்ய வேண்டும்**

**அல்லாஹ்வின் நெருக்கம் ஏற்படுவதே உண்மையான இறைவணக்கம் ஆகும்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஜெர்மனியி மஹ்தி ஆபாதிலுள்ள பைத்துல் பஸீர் பள்ளிவாயிலில் 25 அக்டோபர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **அஹா** மாதம் **25 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ اِنْ مَّكَّنّٰهُمْ فِي الْاَرْضِ اَقَامُوا الصَّلٰوةَ وَاٰتَوُا الزَّكٰوةَ

اَمَرُوْا بِالْمَعْرُوْفِ وَنَهَوْا عَنِ الْمُنْكَرِ ؕ وَلِلّٰهِ عَاقِبَةُ الْاُمُوْرِ

அதாவது அவர்களுக்கு உலகில் நாம் ஆற்றலை வழங்கினால் அவர்கள் தொழுகையை நிலைநாட்டுவார்கள். ஸக்காத் வழங்குவார்கள். நல்ல விஷயங்களை ஏவுவார்கள். தீய விஷயங்களைத் தடுப்பார்கள். எல்லா பணிகளின் முடிவும் அல்லாஹ்விடமே உள்ளது. (22:42)

இந்த வசனத்தில் அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு கவனமூட்டியுள்ளான். உண்மையான நம்பிக்கையாளர் என்பவர் ஆற்றல் கிடைக்கும்போது பலவீனம் மற்றும் நிம்மதியின்மைக்குப் பிறகு பாதுகாப்பு கிடைத்துவிட்ட நிலையில், நிலைமை மேம்பட்டு விட்டால், சுதந்திரமாக தமது மார்க்கக் கட்டளைகளை நிறைவேற்றும் நிலை உருவான பிறகு தமது மன விருப்பங்கள், சொந்த விருப்பங்களின் பின்னால் செல்பவர்களாக ஆக மாட்டார்கள்.

மாறாக, தொழுகையை நிலைநாட்டுபவர்களாகவும், தமது தொழுகையில் கவனம் செலுத்துபவர்களாகவும் தமது பள்ளிகளை நிரப்புபவர்களாகவும் மனித குலத்திற்கு சேவை செய்பவர்களாகவும், அல்லாஹ்வுடைய பயத்துடன் ஏழைகள் மற்றும் வறியவர்களுக்கு தமது பொருளிலிருந்து செலவு செய்பவர்களாகவும் ஆகி விடுகின்றனர். மார்க்கத்தைப் பரப்புவதற்காக தியாகம் செய்பவர்களாகி விடுகின்றனர். அல்லாஹ்வுடைய மார்க்கத்தைப் பரப்புவதற்காக தமது பொருளிலிருந்து செலவு செய்து தமது பொருளைத் தூய பொருளாக்கி விடுகின்றனர்.

நல்ல விஷயங்களின் பக்கம் தானும் கவனம் செலுத்தி, மற்றவர்களையும் நல்ல காரியங்களைச் செய்யுமாறும், அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களின் உரிமையை நிறைவேற்றுவதற்கு கவனமூட்டியும் வருவர். தீமைகளிலிருந்து தாமும் விலகி மற்றவர்களையும் தீமையிலிருந்து தடுக்கின்றனர். ஏனெனில் இந்த அனைத்துப் பணிகளும் அல்லாஹ்வுடைய அச்சத்தை மனதில் கொண்டவாறு அல்லாஹ்வுடைய கட்டளையின்படி செயல்பட்டவாறு செய்கின்றனர். எனவே அல்லாஹ்வும் கூட அவர்களின் பணிகளுக்கு மிகச்சிறந்த விளைவை ஏற்படுத்துகிறான்.

ஏனெனில் ஒவ்வொரு விஷயத்திற்கும் முடிவை இறைவனே செய்ய வேண்டியதுள்ளது. எனவே எந்தப் பணி இறைவனது வழிகாட்டல்படியும் கட்டளையின்படியும் அவனது அச்சத்தை உள்ளத்தில் கொண்டவாறு செய்யப்படுமோ நிச்சயமாக அதன் முடிவு நல்லதாகவே அமையும். இந்த அடிப்படை விஷயத்தை நம்மில் ஒவ்வொருவரும் புரிந்து கொண்டால் அல்லாஹ்வின் அருளைப் பெறுபவராக ஆகிக் கொண்டே செல்வோம்.

நீங்கள் இங்கு மஹ்தியாபாத்தில் பள்ளிவாயிலை உருவாக்கியுள்ளீர்கள். கடந்த நாட்களில் போல்டாவிலும், வீஸன் பகுதியிலும் பள்ளிவாயிலின் திறப்பு விழா நடந்தது. ஜெர்மனி ஜமாஅத் 100 பள்ளிவாயில்கள் கட்டும் பணியில் அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாயிலைக் கட்டும் வாய்ப்பு பெற்று வருகிறது. நிச்சயமாக ஜமாஅத் மக்கள் பள்ளிவாயிலைக் கட்டுவதற்கு பொருள் தியாகம் செய்யக் காரணம் அல்லாஹ்வுடைய கட்டளையின்படி செயல்பட்டவாறு நாம் நமது வணக்கங்களின் தரத்தை உயர்த்துவதற்கேயாகும்.

இங்கு பாகிஸ்தானிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பிறகு நமது பொருளாதார நிலை உயர்ந்துள்ளது. இது நம்மில் ஒவ்வொருவரிடமும் ஒரு விஷயத்தில் கவனமூட்ட வேண்டும். நாம் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ய வேண்டும். அவனது வீட்டைக் கட்ட வேண்டும். நாம் அவ்விடத்தில் ஒன்றுகூடி தொழுகையை நிலைநாட்ட இயல வேண்டும். ஜமாஅத்துடன் தொழுகையை நிலைநாட்ட இயல வேண்டும். நமது தொழுகையில் முழுக்க முழுக்க அல்லாஹ்வின் பக்கம் மட்டுமே கவனம் இருக்கத்தக்க நிலை உருவாக வேண்டும். சுதந்திரமாக அல்லாஹ்வின் வணக்கத்தின் உரிமையை நிலைநாட்ட முடிய வேண்டும்.

பாகிஸ்தானில் நமக்கு மார்க்கச் சுதந்திரம் இல்லை. அங்குள்ள நாட்டின் சட்டம் நமக்கு பள்ளிவாயில் கட்ட அனுமதி தருவதில்லை. நாம் சுதந்திரமாக தொழுவதற்கு அனுமதி தருவதில்லை. நாம் இபாதத் செய்யவோ இபாதத்தின் உரிமையை நிறைவேற்றவோ

முடிவதில்லை. இங்கு அல்லாஹ்வின் உரிமையை நிறைவேற்றுவதற்கு நாம் பள்ளிவாயிலைக் கட்டுகிறோம். நம்மீது அல்லாஹ் பொருளாதார ரீதியிலும் அருள் புரிந்துள்ளான்.

எனவே சிந்திக்க வேண்டும். காரணம் நாம் இங்கு அடியார்களின் உரிமையையும் நிறைவேற்ற முடியும் என்பதனால் இதனை செய்ய வேண்டும்; செய்து வருகிறோம். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளோம். காரணம் நாம் நமது ஆன்மீக நல்லொழுக்க நிலைகளை மேம்படுத்துபவர்களாகவேயாகும். நமது இந்தப் பள்ளி நமக்கு இதன் பக்கம் கவனம் ஊட்டுகிறது; ஊட்டவும் வேண்டும்.

இந்த சிந்தனையும் இதன்படி செயல்பட முழுமையான முயற்சியும் இங்கிருக்கிற ஒவ்வோர் அஹ்மதிக்கும் இருக்க வேண்டும். மூளையிலும், உள்ளத்திலும் இருக்க வேண்டும். அவர்கள் தமது செயல் மூலம் நிரூபித்துக் காட்ட வேண்டும். அது அல்லாமல் நாம் பள்ளிவாயில்களை உருவாக்குவது பயனற்றதாகும்.

எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். நமது நோக்கம் பள்ளிவாயிலைக் கட்டுவதால் மட்டுமே நிறைவேறாது. மாறாக, அது நிறைவேறுவதற்கு நாம் களங்கமற்ற முறையில் இறைவனை வணங்குவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நமது தொழுகைகளை நிலைநாட்ட வேண்டும். ஜமாஅத்துடன் தொழுவதற்காக பள்ளிவாயிலுக்கு வர வேண்டும்.

நமது கவனத்தை பள்ளிவாயிலின் பக்கம் அல்லாஹ்வின் பக்கம் வைக்க வேண்டும். நமது கவனம் அங்கிங்கு சென்றால் உடனேயே கவனத்தை தொழுகையின் பக்கம் இறைவன் பக்கம் திரும்ப வேண்டும். தொழுகையில் நமக்கு அல்லாஹ்வுடன் பேச வாய்ப்பு கிடைக்கிறது என்ற இந்த உண்மையை நாம் புரிந்தால் நாம் வெறுமனே விழுந்து எழமாட்டோம். மாறாக, நமது மொழியிலும் துஆ செய்வோம். அல்லாஹ்வின் சந்திப்பு கிடைக்கத்தக்க அத்தகைய தொழுகைக்காக முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இறையச்சமுடையவரின் பண்புகளை விளக்கியவாறும் உண்மையான நம்பிக்கையாளரின் பண்புகளை விளக்கியவாறும் கூறுகிறார்கள்:

அவர்கள் يُقِيْمُوْنَ الصَّلٰوةَ அதாவது தொழுகையை நிலைநாட்டுவார்கள். அவர்கள் தொழுகையை நிலைநாட்டுகின்றனர். இறையச்சம் கொண்டவரால் மட்டுமே தொழுகையை நிலைநாட்ட முடியும். சிலவேளை தொழுகை விழுந்து விடுகிறது. அதனை நிலைநாட்டுகின்றனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இறையச்சம் கொண்டவர், இறைவனுக்குப் பயந்து நடக்கின்றார். அவர் தொழுகையை நிலைநாட்டுகின்றார். இந்நிலையில் பல்வேறு ஐயங்களும் எண்ணங்களும் ஆபத்துகளும் ஏற்படுகின்றன. இவை உருவாகி தீங்கு ஏற்படுத்துகின்றன. உள்ளத்து எண்ணங்கள், ஐயங்கள் ஆகியவை இறைவனிடமிருந்து எண்ணத்தை திருப்புகின்றன. உள்ளத்து குழப்ப எண்ணங்கள், அல்லாஹ்விடமிருந்து கவனத்தை அகற்றும்போது அதுதான் தொழுகை விழுவதாகும். அதனை மீண்டும் நிலைநாட்டுவதும் இதுதான்.

அதாவது மீண்டும் அல்லாஹ்வின் பக்கம் கவனத்தை திருப்ப வேண்டும். ஆனால் உள்ளத்தில் இறையச்சம் இருந்தால் ஓர் இறையச்சம் கொண்ட உண்மையான நம்பிக்கையாளர் நஃப்ஸின் இந்த ஊசலாட்டங்களிலிருந்து தொழுகையை நிலைநாட்டுகிறார். அதாவது தொழுகை விழுகிறது. கவனம் அங்கிங்கு செல்கிறது. ஆனால் முயற்சி செய்து தொழுகையை நிலைநாட்ட வேண்டும் என்று தக்வா விரும்புகிறது. தமது கவனத்தை மீண்டும் தொழுகையின் பக்கமும் இறைவன் பக்கமும் கொண்டு வர விரும்புகிறது. இதுவே நிலைநாட்டுவதாகும். மீண்டும் மீண்டும் முயன்று சிரத்தை எடுத்து அதனை நிலைநாட்ட முயற்சி செய்யும்போது நிரந்தர இயல்பில் மனிதன் தொழுகையில் நிலை நின்றால் அதற்காக முயன்று கொண்டிருந்தால், நான் தொழுகையின் உயர் தரத்தை அடைய வேண்டும் என்று முயன்றால் பிறகு ஒரு நேரம் வருகிறது. அல்லாஹ் தனது வார்த்தைகள் மூலம் வழிகாட்டல் வழங்குகிறான்.

பிறகு அன்னார் வழிகாட்டலுக்குத் தெளிவுரையாகக் கூறுகிறார்கள்: ஹிதாயத் என்றால் என்ன? மனிதன் தொழுகையை நிலைநாட்டுவதற்காக முயற்சி செய்தல் என்ற விவகாரமே அப்போது இருக்காது. தொழுகை விழுந்து விட்டது. அதனை மீண்டும் நிலைநாட்டியுள்ளேன் என்ற விவகாரம் இருப்பதில்லை. மாறாக, ஹிதாயத் பெற்ற பிறகு தொழுகை அவனைப் பொருத்தமட்டில் உணவு ஆகிவிடுகிறது.

மனித உடலுக்கு உணவு உண்பது எப்படி அவசியமோ அதனைப் போன்று ஆன்மீக வளர்ச்சிக்காக தொழுகை ஓர் உணவாக ஆகிவிடுகிறது. உலகியல் உணவின்றி வாழ்வு இல்லாதது போன்றே நான் விளக்கத்திற்காகக் கூறுகிறேன். தொழுகையின்றியும் வாழ்வில்லை. வாழ்வை நிலைநாட்ட உணவு தேவை என்பதற்காக மட்டுமின்றி இந்த உணவில் ஒரு ரசனையும் கூட இருக்கிறது.

அன்னார் கூறுகின்றார்கள்: அந்த தொழுகையில் ஒரு ரசனை இன்பம் வழங்கப்படுகிறது. எந்த அளவுக்கு எனில் கடும் தாகத்தின் வேளையில் தண்ணீரில் ஒரு சுவை இருப்பதுபோன்று அவர் மிகவும் தேட்டத்துடன் அதனை அருந்துகிறார். அதில் ஓர் இன்பத்தை அனுபவிக்கிறார்.

தாகம் எடுக்கிறது. கடும் தாகம் எனில் மிக மோசமாக உள்ளது எனில் தண்ணீர் கிடைக்காமல் இருந்து பிறகு தண்ணீர் கிடைக்கிறது. அதுவும் குளிர்ந்த நீர் எனில் அதில் ஓர் ரசனை ஏற்படுகிறது. அதுபோன்று தான் உண்மையான நேர்வழி பெற்றவருக்கு தொழுகையில் இன்பம் கிடைக்கிறது.

அன்னார் இன்னோர் உதாரணம் தருகிறார்கள்: ஒருவர் பசியுடன் இருக்கிறார். அவருக்கு மிகவும் சுவையான உணவு கிடைத்தால் அதனை உண்பதால் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அத்தகைய உண்மையான மகிழ்ச்சி தொழுபவருக்கு கிடைக்கிறது. இந்த தொழுகையைத்தான் தொழ வேண்டும். மகிழ்ச்சியுடன் தொழ வேண்டும். அதனை ஒரு சுமையாகக் கருதி தொழக் கூடாது.

பிறகு அன்னார் இன்னோர் உதாரணம் தந்துள்ளார்கள். உண்மையான நம்பிக்கையாளருக்கு தொழுகை ஒரு போதைப் பொருளாக இருக்கிறது. அதுவன்றி அவர் மிகவும் வெறுப்பை உணர்கிறார். போதைப் பழக்கமுள்ளவர் போதைப் பொருள் கிடைக்கவில்லை எனில் நிம்மதியிழக்கிறார். பெரும் நெருக்கடியும், நிம்மதியிழப்பும் அடைகிறார். தொழுகையை நிறைவேற்றுவதால் அவருக்கு ஒரு சிறப்பான குளிர்ச்சியும் மகிழ்ச்சியும் கிடைக்கிறது.

அன்னார் கூறுகிறார்கள்: அதனை வார்த்தைகளில் விளக்க முடியாது. உண்மையான தொழுகையைத் தொழுபவருக்கு கிடைக்கும் இன்பத்தை வார்த்தைகளில் விளக்க முடியாது.

அன்னார் கூறுகிறார்கள்: ஒரு நம்பிக்கை கொண்ட இறையச்சமுள்ளவர் தொழுகையில் இன்பத்தைப் பெறுகிறார். எனவே தொழுகையை நன்றாக நிறுத்தி அனுபவித்து தொழ வேண்டும். தொழுகை எல்லா முன்னேற்றத்தின் வேரும் நெஞ்சும்

ஆகும். எனவே தொழுகை நம்பிக்கை கொண்டவரின் மிஃராஜ் என்று கூறப்பட்டுள்ளது. அதன் மூலம் மனிதன் இறைவன் வரை சென்று சேர முடியும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 309,310)

எனவே பள்ளிவாயில் கட்டுவதனால் நாம் அத்தகைய தொழுகையைத் தொழுவதற்காக கட்ட வேண்டும். நாம் பள்ளிவாயில் கட்ட கவனம் செலுத்தினால் இந்த மிஃராஜைப் பெறுவதற்காக கட்ட வேண்டும். இந்த மிஃராஜ் நம்முடையதாக வேண்டும். இதுவே நம்மை இயன்றவரை கொண்டு செல்கிறது. இறைவனிடம் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. எனவே இந்த தகுதி நமக்கு எப்படி கிடைக்குமோ என்று நம்பிக்கை இழக்கக் கூடாது. தொடர்ந்த முயற்சியால் இந்த தரத்தை அல்லாஹ் வழங்குகிறான்.

நிறைய பேர் கேள்வி கேட்கிறார்கள். இப்போதும் கேள்வி கேட்கிறார்கள். எனக்கும் எழுதுகிறார்கள். தொழுகையில் கவனம் நிலைக்கவில்லை என்கின்றனர். அதற்கு இதுவே தீர்வாகும். முயற்சி செய்து மீண்டும் மீண்டும் கவனத்தை நிலைநாட்ட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சபையிலும் கூட ஒரு நண்பர் இந்த கேள்வியைக் கேட்டார்.

எனது உள்ளம் தற்போது தொழுகையில் எந்த ரசனையையும் இன்பத்தையும் பெறவில்லை. இதன் காரணத்தால் நான் மிகவும் கவலை கொண்டுள்ளேன். ஒருமுறை தொழுகையின் இன்பத்தைப் பெற்று விட்டேன். இப்போது அவ்வப்போது பல்வேறு எண்ணங்கள் வருகின்றன. நான் அவற்றை விலக்கினாலும் கூட எண்ணங்கள் என்னைப் பின்தொடராமல் விடுவதில்லை. என்ன செய்வேன்? என்று கேட்டார்.

அன்னார் கூறினார்கள்: இதுவும் கூட மனிதன் அந்த எண்ண அலைகளால் மூழ்கி விடாமல் இருப்பதும் கூட அல்லாஹ்வின் பெரும் கருணையாகும். உமக்கு அந்த எண்ணம் உருவாகியுள்ளது. எண்ணங்களை மிகைக்க விடவில்லை. இந்த நிலை இருந்தால் மனிதன் தனது ஊசலாட்டங்களை தம்மை மிகைக்க விடவில்லை எனில் அதுவும் கூட நற்கூலியின் நிலையே ஆகும். இதற்காக அல்லாஹ் நற்கூலி வழங்குகிறான். அவன் அத்தகைய ரஹீம் மற்றும் கரீம் (நிகரற்ற அன்பும் சிறப்பும் உடையவன்) ஆவான். நஃப்ஸே அம்மாரா கவனமே கொள்வதில்லை. அது தீமைகளைச் செய்து கொண்டே செல்கிறது. அதற்கு தெரிவதே இல்லை.

நஃப்ஸே லவ்வாமா தீமை செய்தாலும் தீமைக்காக அவ்வப்போது பதற்றம் கொள்கிறது. வெட்கப்படுகிறது. ஆகவே இந்த நஃபஸே லவ்வாமா நிலையில் தீமையின் மீது வெட்கமும் பதற்றமும் உணர்வும் ஏற்படுகிறது. இதற்காகவும் அல்லாஹ் நற்கூலி வழங்குகிறான். வெட்கப்பட்டு அவர் கழிவிரக்கம் கொள்ளவும் செய்கிறார் எனில் அவர் நஃப்ஸின் அடிமை அல்ல. இதற்காக பதற வேண்டியதில்லை. மன ஊசலாட்டங்கள் வருகின்றன எனில் அதனை அகற்ற முயற்சி செய்கிறீர் எனில் அதற்காகவும் அல்லாஹ் நற்கூலி வழங்குகிறான். அத்தகையவர் நஃப்ஸின் அடிமை அல்ல. இந்நிலையில் இருப்பது ஓரளவுக்கு தேவையும் ஆகும். இதனால் உள்ளம் சலிப்படையத் தேவையில்லை.

ஏனெனில் இதில் பெரும் பெரும் நற்கூலி உண்டு. எந்த அளவுக்கு எனில் இறைவன் தாமே அவர் மீது நிம்மதியையும் ஆறுதலையும் தருகின்றான். இறைவனது ரஹ்மத்தின் நேரம் வரும்போது ஒரு குளிர்ச்சி உருவாகிறது. அந்நிலை பறந்து போய் விடுகிறது. மனிதன் ஒருபோதும் களைப்படைந்து விடக்கூடாது. ஸஜ்தாவில் يَاحَيُّ يَاقَيُّوْمُ بِرَحْمَتِكَ اَسْتَغِيْثُ என்று அதிகமாக ஓதி வாருங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

சஜ்தாவில் يَاحَيُّ يَاقَيُّوْمُ بِرَحْمَتِكَ اَسْتَغِيْثُ என்ற துஆவை ஓதுங்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். அவசரம் ஆபத்தாகும். ஒருபோதும் அவசரம் காட்டாதீர்கள். இஸ்லாத்தில் மனிதன் வீரனாக வேண்டியுள்ளது. அவசரப்படுபவர் வீரனல்ல. கோழை ஆவார். தொடர்ந்த முயற்சிக்குப் பிறகு ஷய்த்தானின் தாக்குதல் பலவீனமடைகிறது. அவன் ஓடி விடுகிறான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்ம் 347)

ஆகவே இந்த அடிப்படை விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். அவசரப்படக் கூடாது. நிரந்தரமாக அல்லாஹ்வை பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். அவன் முன் குனிந்திருக்க வேண்டும். ஒருநாள் ஷய்த்தான் தோல்வியை ஒப்புக் கொண்டு ஓடி விடுவான். ஆனால் அவசரப்பட்டால் தொழுகையை நிலைநாட்ட முயற்சி செய்யவில்லை என்றால் மனிதன் ஷய்த்தானின் பிடியில் வந்து விடுவான். பொதுவாக இதுவே காணக் கிடைக்கிறது. மனிதன் அசவரப்படுகிறான். உடனே விளைவு தெரியாவிட்டால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை என்று கூறி விடுகிறான். துஆ செய்வதால் ஒரு பயனும் கிடைக்கவில்லை என்று கூறி விடுகிறான்.

இதனை நினைவில் கொள்ள வேண்டும். முழுக்க முழுக்க உலகத்தை மட்டுமே மனிதன் கேட்டுக் கொண்டிருந்தால் அத்தகைய துஆவை அல்லாஹ் ஒப்புக் கொள்வதில்லை. ஆம், அல்லாஹ்விடம் தனது ஆன்மீக மார்க்க முன்னேற்றத்தைக் கேட்டால் அல்லாஹ்வின் நெருக்கத்தைக் கேட்டால் பிறகு அல்லாஹ் அருகில் வருகிறான். பிறகு அந்த மனிதனின் உலகியல் தேவையையும் நிறைவேற்றித் தருகிறான்.

ஆகவே அல்லாஹ்விடம் கேட்பதற்கும் கூட சில வழிமுறைகளும் விதிமுறைகளும் உள்ளன. அதன்படி நடக்க வேண்டியதுள்ளது. ஒருபுறம் அல்லாஹ் اُدْعُوْنِيْٓ اَسْتَجِبْ لَكُمْ. என்னை நீங்கள் அழைத்தால் நான் அதனைக் கேட்பேன் (40:61) என்று கூறிவிட்டு மறுபுறம் அடியான் அழைத்துக் கொண்டே இருந்தும் கூட அல்லாஹ் கேட்கவே இல்லை என்பது எவ்வாறு நடக்க முடியும்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை விளக்கியவாறு கூறினார்கள்: தொழுகையில் துஆவும் தரூதும் உள்ளது. அது அரபி மொழியில் உள்ளது. நீங்கள் தொழுகையில் உங்கள் மொழியில் துஆ கேட்பது தடுக்கப்பட்டதல்ல. இறை கட்டளை இதுவாகும். இதில் கவனம் செலுத்துங்கள். உள்ளத்தை நிலைநிறுத்துங்கள். உள்ளத்தை மென்மைப்படுத்துங்கள். நாம் அல்லாஹ்வின் முன் நிற்கிறோம் என்ற எண்ணத்தை உருவாக்குங்கள். அவ்வாறு செய்பவரின் பாவம் விலகிப் போகிறது. எவரிடம் எளிமை உள்ளதோ அவரது பாவம் விலகிப் போகிறது.

இவ்வகையில் கூறுகிறார்கள்: اِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ அதாவது நன்மைகள் தீமைகளை அகற்றுகின்றன. (11:115) இங்கு ஹஸனாத் என்பதன் பொருள் தொழுகையாகும். எளிமை என்பது

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

தமது மொழியில் கேட்பதால் ஏற்படுகிறது. மனித உள்ளம் கரைகிறது. மனிதன் தனது மொழியில் கேட்கும்போது இது ஏற்படுகிறது. அதனால் நாம் என்ன கேட்கிறோம் என்று அவருக்கு தெரிகிறது. ஆகவே உங்கள் மொழியில் துஆ செய்யுங்கள்.

மேலும் கூறுகிறார்கள்: அல்லாஹ் துஆ கற்றுத் தந்துள்ளான். அதைம் கண்டிப்பாக செய்ய வேண்டும். அவற்றுள் சிறந்த துஆ சூரா ஃபாத்திஹா ஆகும். அது துஆக்களின் தொகுப்பு ஆகும். சூரா ஃபாத்திஹாவில் அல்லாஹ் ஒரு துஆவைக் கற்றுத் தந்துள்ளான். அது اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்பதாகும். இதன் பொருள் மிகவும் பரந்தது.

இதனை தெளிவுபடுத்தியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: விவசாயிக்கு விவசாயத்தின் வேளை வரும்போது, விவசாயத்தின் ஸிராத்தே முஸ்தகீமை அடைகிறார் எனில், அவருக்கு விவசாயம் செய்யத் தெரிந்தால், ஏர் உழத் தெரிந்தால் விதை தூவத் தெரிந்தால், எப்போது உரம் போட வேண்டும்? என்பது தெரிந்தால், எப்போது தண்ணீர் விட வேண்டும்? எப்போது மருந்து தெளிக்க வேண்டும்? என்று தெரிந்தால், அவர் ஸிராத்தே முஸ்தகீமை அடைந்துவிட்டால் அவர் விவசாயத்தில் ஸிராத்தே முஸ்தகீமைப் பெற்றவராவார். அதுபோன்று நீங்கள் இறைவனைப் பெறுவதில் ஸிராத்தே முஸ்தகீமைத் தேடினால் நீங்கள் துஆ செய்யுங்கள்.

என் இறைவா! நான் உனது பாவம் செய்த அடியான்; வீழ்ந்து கிடக்கும் அடியான்; எனக்கு வழிகாட்டுவாயாக. தாழ்ந்த உயர்ந்த எல்லா நாட்டங்களையும் வெட்கமின்றி இறைவனிடம் வேண்டுங்கள். அசல் கொடையாளி அவனே ஆவான். அதிகமாக துஆ செய்பவரே மிகவும் நல்லவராவார். ஒரு கருமியின் வாசலில் தினமும் சென்று ஒருவர் கேட்கிறார் எனில் நாம் இறுதியில் ஒருநாள் அந்த கருமிக்கும் வெட்கம் வரும் எனில் இறைவனிடம் வேண்டுபவர், அவன் ஒரு இணையற்ற சிறப்பிற்குரியவனாக இருக்கின்ற நிலையில் ஏன் பெறாமல் போவார்? கேட்பவர் நிச்சயமாக பெறுகிறார். தொழுகையின் இன்னொரு பெயர் துஆ ஆகும். எனவே கூறினான்: اُدْعُوْنِیْۤ اَسْتَجِبْ لَكُمْ – நீங்கள் என்னை அழையுங்கள். நிச்சயம் நான் கேட்பேன். (40:61)

பிறகு கூறினான்:

وَاِذَا سَاَلَكَ عِبَادِیْ عَنِّیْ فَاِنِّیْ قَرِیْبٌ ؕ اُجِیْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ

அதாவது என் அடியான் என்னைப் பற்றி உன்னிடம் கேட்டால் நான் மிகவும் அருகில் இருக்கிறேன். நான் அழைப்பவர் அழைக்கும்போது அதனை செவிமடுக்கிறேன். (2:187)

சிலர் இறைவனது இருப்பில் சந்தேகம் கொள்கின்றனர். ஆனால் அல்லாஹ், எனது இருப்புக்கு ஆதாரம் நீங்கள் என்னை அழைத்தால் என்னிடம் கேட்டால் நான் உங்களை அழைப்பேன். பதில் தருவேன். உங்களை நினைவில் கொள்வேன் என்று கூறுகின்றான். நான் அதிகம் கேட்டு விட்டேன். பதில் தரவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: நீங்கள் ஓரிடத்தில் நின்று தூரத்தில் இருப்பவனை அழைக்கிறீர்கள். ஒருபுறம் தூரம் அதிகம். மறுபுறம் உங்கள் காதில் குறைபாடும் உள்ளது. உங்கள் காது கேட்க முடியாமல் குறைபாடுள்ளதாக உள்ளது. நீங்கள் தூரத்திலிருந்து அழைக்கின்றீர்கள். அவர் உங்கள் அழைப்பைக் கேட்டு பதில் தருகிறார். அவர் தூரத்திலிருந்து பதில் தருகிறார். உங்கள் காதில் செவிடும் வேறு இருப்பதால் கேட்க முடிவதில்லை.

உங்களுக்கிடையில் உள்ள திரையை அகற்றி, இடைவெளி இல்லாமல் ஆகிவிட்டால் நிச்சயமாக நீங்கள் குரலைக் கேட்பீர்கள். முயற்சி செய்து செய்து அருகில் சென்றால் அவனது குரலைக் கேட்பீர்கள். உலகம் பிறந்தது முதல் இதற்கு நிரூபணம் ஏற்பட்டுக் கொண்டே உள்ளது. அந்த இறைவன் தனது சிறப்பான அடியார்களுடன் உரையாற்றுகிறான். அவ்வாறு இல்லை எனில் அவனது இருப்பு உள்ளது என்பதே சிறிது சிறிதாக மறைந்து விடும். இறை இருப்புக்கு வலுவான ஆதாரம் இதுவே.

அதாவது நாம் அவனது குரலைச் செவிமடுக்கிறோம். பார்த்தோம்; பேசினோம். தற்காலத்தில் இறை உரையாடல்தான் தோற்றத்திற்கான மறு உருவம் ஆகும். இறைவனது தோற்றத்திற்கும் நமக்கும் இடையில் திரை இருந்தால் நாம் கேட்க முடியாது. இடையிலுள்ள திரை அகன்று விட்டால் அவனது குரல் கேட்கக் கிடைக்கும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்க;ம 226,227)

ஆகவே இந்த இடையிலுள்ள திரையை அகற்றுவது அவசியமாகும். அல்லாஹ்வின் வாக்குறுதி ஒருவர் என் பக்கம் கவலையுடன் வருவார் என்றால், எனது இருப்பின் உண்மையைப் புரிந்து என் பக்கம் நகருவார் என்றால் நானும் அவர் பக்கம் வருவேன். இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள். அல்லாஹ் கூறுகிறான்: அடியான் என் பக்கம் ஓர் அடி எடுத்து வைத்தால் நான் அவன் பக்கம் இரண்டு அடி எடுத்து வைப்பேன். அடியான் நடந்து வந்தால் நான் ஓடி வருவேன்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தவ்ஹீது... ஹதீஸ் எண் 7536)

ஆகவே குறை இருக்கிறது எனில் அது நம்மிடம்தான். நாம் அல்லாஹ்வின் பக்கம் செல்ல வேண்டிய தேவை உள்ளது. அந்த வழியைத் தேடவும் அவனை சந்திக்கவும் கூட அவனது உதவி தேவை. நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் வந்து விட்டதாக வாதம் செய்கிறோம்.

நமக்கு அவசியமானது நாம் அவன் பக்கம் செல்வதற்காக முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு சொல்லை மட்டும் செயல்படுத்துவதால் பள்ளிவாயில்களைக் கட்டுங்கள். அதனால் இஸ்லாத்தின் அறிமுகம் ஏற்படும் என்று கூறியதை மட்டும் செயல்படுத்துவது போதாது. அதற்காக செயல் ரீதியிலான முயற்சியின் தேவை உள்ளது. பிறகு அல்லாஹ்வின் உதவியின் தேவையும் உள்ளது. எனவே முயற்சி செய்தவாறு அல்லாஹ்வின் உதவியும் கூட கிடைத்து விட்டால் பிறகு வெற்றி கிடைக்கும்.

இந்த வகையில் இதனை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள்! பைஅத்தின்போது கழிவிரக்கத்துடன் பாவத்தை ஒப்புக் கொள்வதில் ஒரு பரக்கத் உருவாகிறது. அத்துடன்

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்கும், இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள் அல்லாஹ் அருள் புரிந்தவர்களான நபிமார்கள் (தீர்க்கதரிசிகள்), சித்தீக்குகள் (உண்மையாளர்கள்), ஷஹீதுகள் (உயிர்த்தியாகிகள்), ஸாலிஹீன்கள் (நல்லவர்கள்) ஆகியோரைச் சேர்ந்தவர்களாய் இருப்பார்கள். இத்தகையோர் (மிக்க) நல்ல நண்பர்களாவர். (4:70)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

மார்க்கத்திற்கு உலகை விட முன்னுரிமை தருவதாக ஒரு நிபந்தனையையும் இணைக்கும்போது முன்னேற்றம் ஏற்படுகிறது. பைஅத் செய்ததால் பரக்கத் உருவாகி விட்டது.

அத்துடன் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவேன் என்ற நிபந்தனையும் இருக்கும் எனில் முன்னேற்றம் ஏற்படுகிறது. இந்த முன்னுரிமை வழங்கல் உங்கள் கையில் இல்லை. மாறாக, அதற்கு இறை உதவியின் கடும் தேவை உள்ளது. அல்லாஹ்வின் உதவி தேவையாகும்.

அல்லாஹ் கூறினான்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا ؕ

அதாவது எவர்கள் நமது வழியில் முயற்சி செய்வார்களோ அவர்கள் இறுதியில் வழிகாட்டல் பெறுகின்றனர். (29:70) எவ்வாறு ஒரு விதை விதைப்பவரின் உழைப்பின்றி பரக்கத் இல்லாமல் போய்விடுமோ ஒரு மனிதன் ஒரு விதையைத் தூவி விட்டு அதற்கு முழுமையான பராமரிப்பு தராவிட்டால், தண்ணீர் ஊற்றாவிட்டால் அதில் பரக்கத் இல்லாமல் போய் விடுகிறது. அது மிகவும் பலவீனமாகி விடுகிறது. தாமும் அழிந்து விடுகிறார்.

அதுபோன்று நீங்கள் ஒவ்வொரு நாளும் இதனை நினைவில் கொள்ளா விட்டால், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவேன் என்ற உறுதிமொழியை நினைவில் கொள்ளாவிட்டால், துஆ கேட்காவிட்டால், இறைவா! எனக்கு உதவி செய்வாயாக என்று கேட்காவிட்டால் இறை உதவி இறங்காது. இறை உதவி இன்றி மாற்றம் ஏற்படுவது சாத்தியமில்லை. மனிதனிடம் மாற்றம் ஏற்பட வேண்டும் எனில் இறை உதவி தேவையாகும். எனவே எவ்வாறிருப்பினும், மனிதன் உதவி கேட்பதற்காக அருளைக் கேட்பதற்காக துஆ கேட்க வேண்டியதுள்ளது.

அவர்கள் கூறினார்கள்: திருடன், தீயவன், விபச்சாரன், குற்றச்செயல் செய்பவன் எப்போதும் அப்படியே இருப்பதில்லை. நிச்சயமாக அவர்களிடம் மாற்றம் ஏற்படுகிறது. இதே நிலையே ஒவ்வொரு தீய செயல் செய்பவரின் நிலையாகும். இதன் மூலம் நிரூபணமாவது மனிதனிடம் நிச்சயமாக நன்மைக்கான எண்ணம் கண்டிப்பாக உள்ளது. அந்த எண்ணத்திற்கு இறை உதவி தேவை. எனவே ஐவேளை தொழுகையில் சூரா ஃபாத்திஹா ஓதுமாறு கட்டளை உள்ளது. இதில் اِيَّاكَ نَعْبُدُ மற்றும் اِيَّاكَ نَسْتَعِيْنُ உள்ளது. தொழுவதும் உனக்கே. உதவியும் உன்னிடமே வேண்டுகிறேன். இதில் இரு விஷயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நல்ல பணியிலும், ஆற்றல், முயற்சி, உழைப்பு இவற்றைப் பயன்படுத்துங்கள். ஒவ்வொரு நன்மையும் செய்வதற்கு அல்லாஹ் ஆற்றலை வழங்கியுள்ளன். முயற்சி எவ்வளவு முடியுமோ செய்ய வேண்டும். இதுவே நஃபூதுவில் கூறப்பட்டுள்ளது. அதாவது எவர் என்னிடம் துஆ கேட்கிறாரோ, அவர் முயற்சி செய்யவில்லை எனில் பயன்பெற மாட்டார்.

துஆவினால் மட்டும் எதுவும் நடக்காது. முயற்சியும் செய்ய வேண்டும். ஒரு விவசாயி விதையைத் தூவி விட்டு முயற்சி செய்யாமல் பழத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்? இது அல்லாஹ்வின் நடைமுறையாகும். விதை தூவி விட்டு வெறும் துஆ மட்டும் செய்து கொண்டிருந்தால் நிச்சயமாக பயனை இழப்பார். அதற்கு தண்ணீர் பாய்ச்சவில்லை; பராமரிக்கவில்லை எனில் பலனை இழப்பார். உதாரணமாக, ஒரு விவசாயி கடும் முயற்சி செய்கிறார். நிலத்தை உழுது நீர்பாய்ச்சி முயற்சி செய்கிறார் எனில் கண்டிப்பாக வெற்றி அல்லது குறைவாக செய்கிறார் எனில் அவருக்கு விளைச்சல் குறைபாடுள்ளதாகவே இருக்கும். அவருக்கு அரசுக்குரிய வரியைக் கூட தர முடியாமல் போகலாம். அவர் நஷ்டப்படுவார். அதுபோன்றுதான் மார்க்கப் பணிகளும் ஆகும். அதிலும் நயவஞ்சகர், வேலை செய்யாதவர், நல்லடியார், அப்தால், குதுப், கவ்ஸ் ஆகியோர் உள்ளனர். நயவஞ்சகர்களும் பிறக்கிறார்கள். பணி செய்யாதவர்களும் உள்ளனர்.

அவர்களில் ஸாலிஹ்களும் உள்ளனர். அப்தால் வரை செல்பவர்கள், கவ்ஸ் ஆகுபவர்கள் உள்ளனர். இறைவனிடம் தகுதியைப் பெறுகின்றனர். சிலர் நாற்பது ஆண்டுகள் தொழுதும் முதல் நாளில் இருந்தது போன்றே இருப்பார்கள். எந்த முன்னேற்றமும் ஏற்படுவதில்லை. எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. 30 நோன்புகளில் எந்தப் பயனும் அடைவதில்லை. ரமலானில் 30 நோன்புகள் வைத்து விடுவர். ஆனால் பயன் இருக்காது.

அதேபோன்று ரமலானுக்குப் பிறகும் இருப்பர். அவர்கள், தாம் பெரும் முத்தகி என்றும் தொழுகையாளி என்றும், ஆனால் எமக்கு இறை உதவி எதுவும் கிடைக்கவில்லை என்றும் கூறுவர். முத்தகி என்றும் நிறைய தொழுபவர் என்பதாகவும் வாதம் செய்கிறார். அத்துடன் இறை உதவி கிடைக்கவில்லை என்றும் கூறுவர். அதற்குக் காரணம் என்னவெனில், அவர் சடங்கு போன்று பிறரைப் பார்த்து இபாதத் செய்கிறார்கள். இது கண்டிப்பாக வெளிப்படையான இபாதத் ஆக இருக்கிறது. முன்னேற்றத்திற்கான எந்த எண்ணமும் இல்லை. பாவத்தைப் பற்றிய உணர்வும் இல்லை.

என்னிடம் என்னென்ன பாவங்கள் உள்ளன என்று அறிய முயற்சி செய்வதும் இல்லை. உண்மையான தக்வாவின் தேட்டமும் இருப்பதில்லை. பாவத்தைப் பற்றி கவனம் இருக்கும் எனில் என்னென்ன பாவங்கள் உள்ளன என்று தேடினால் பிறகு உண்மையான கழிவிரக்கம் உருவாகும். அவர் தேட ஆரம்பிப்பார். அவர் முதல் அடியிலேயே நிற்கிறார். அத்தகைய மனிதன் விலங்குகளை விட அதிகம் இல்லை. மிருகங்களின் நிலையாகும். அவருக்கும் மிருகத்திற்கும் வித்தியாசம் இல்லை. அந்த இபாதத் இறைவனால் ஏற்றுக் கொள்வதில்லை.

மாறாக, முகத்தில் வீசப்படுகிறது. தொழுகை என்பது தம்முடன் முன்னேற்றத்தைக் கொண்டு வர வேண்டும். உதாரணமாக, ஒரு மருத்துவரிடம் ஒரு நோயாளி சிகிச்சை எடுத்து வருகிறார். ஒரு மருந்தை அவர் 10 நாட்கள் உபயோகித்தும் நாளுக்குநாள் நஷ்டம்தான் ஏற்படுகிறது எனில் இத்தனை நாள்களுக்குப் பிறகும் பயன் ஏற்படவில்லை எனில் இந்த மருந்து எனக்குரியதுதானா? என்ற சந்தேகம் நோயாளிக்கு வருகிறது. இதனை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் வருகிறது. எனவே சம்பிரதாயமான இபாதத் சரியில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 225,226)

அதனை மாற்ற வேண்டும். என்ன காரணம்? அல்லாஹ்வுடைய வாதம் நான் துஆவை ஏற்பேன் என்பதாக உள்ளது. ஆனால் எனது துஆவோ ஒப்புக் கொள்ளப்படவில்லை. என்ன காரணம்? எனவே

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிகின்றனர். நிராகரிப்பவர்கள் ஷைத்தானின் பாதையில் போரிடுகின்றனர். ஆகவே நீங்கள் ஷைத்தானுடைய நண்பர்களுக்கு எதிராகப் போர் செய்யுங்கள். ஷைத்தானுடைய திட்டம் நிச்சயமாகப் பலவீனமானது. (4:77)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

இபாதத் என்பது அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருவதாகும்.

பிறகு தொழுகையின் உண்மையை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

தொழுகை உண்மையில் துஆவாகும். தொழுகையில் கூறுகின்ற ஒவ்வொரு சொல்லும், துஆவின் அடையாளமேயாகும். தொழுகையில் உள்ளம் ஈடுபடவில்லை எனில் தண்டனைக்குத் தயாராக இருங்கள். துஆ செய்வதில்லையோ அவர் அழிவை நோக்கி தாமே செல்கிறார். ஓர் ஆட்சியாளர் இருக்கிறார். அவர் மீண்டும் மீண்டும் கூவி அழைக்கிறார். நான் துன்பம் அடைந்தவரின் துன்பத்தை அகற்றுகிறேன் என்று அறிவிக்கிறார். பிரச்சனை உள்ளவர்களின் பிரச்சனையை அகற்றுகிறேன். நான் மிகவும் கருணை காட்டுகிறேன். திக்கற்றவர்களுக்கு உதவி செய்கிறேன் என்று கூறுகிறார். ஒருவர் சிக்கலில் மாட்டியுள்ளார். அழைப்பவரின் முன் கடந்து செல்கிறார்.

ஆனால் அவரது அழைப்பை பொருட்படுத்தவில்லை எனில், அவர் தமது பிரச்சனையைக் கூறி உதவி கேட்கவில்லை எனில், அவருக்கு அழிவைத் தவிர வேறென்ன நடக்கும்? இந்த நிலைதான் இறைவனுடையதாகும். அவன் ஒவ்வொரு நாளும் மனிதனுக்கு நிம்மதி தருவதற்குத் தயாராக உள்ளான். நிபந்தனை என்னவெனில், மனிதன் விண்ணப்பிக்க வேண்டும். துஆ ஒப்புக் கொள்ளப்பட மனிதன் கட்டுப்படாமையிலிருந்து விலக வேண்டும். அழுத்தமாக துஆ செய்ய வேண்டும். கல் அழுத்தமாக உரசும்போது நெருப்பு உருவாகிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 70)

இந்த நிலையை நம்மிடம் உருவாக்க வேண்டும். நமது தொழுகையும் செயலும் இறைவனது திருப்தியைப் பெறத்தக்கதாக வேண்டும் எனில் பிறகு இந்நிலையை உருவாக்க வேண்டும். பிறகு இறைவனும் தமது நிலையைப் பாதுகாப்பானதாக ஆக்கிச் செல்வான். இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். இங்கு வந்து நமக்கு எது கிடைத்ததோ அது அல்லாஹ்வின் அருளால் கிடைத்தது. அதில் அதிகமாவதும் இறை அருளால்தான் நடக்கும். எனவே அல்லாஹ்வின் இபாதத்தின் மீது கவனம் மற்றும் அவனது அடியார்களின் உரிமையை வழங்க முயற்சி ஆகியவை அவனது கருணையைப் பெற அவசியமாகும்.

நீங்கள் உங்களை ஆய்வு செய்ய முடியும். எந்த அளவுக்கு நாம் தொழுகையை நிலைநாட்ட முயற்சி செய்கிறோம். எந்த அளவுக்கு இறைவனுடன் ஒவ்வொருவரும் தொடர்பு ஏற்படுத்தியுள்ளோம் அல்லது முயற்சி செய்துள்ளோம்? எந்த அளவுக்கு உலகப் பணிகள் தொழுகையில் குறுக்கிடுகின்றன? என்று ஆய்வு செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலை நினைவில் கொள்ள வேண்டும். மறுப்பு மற்றும் நம்பிக்கைக்கு இடையில் வித்தியாசம் ஏற்படுத்தும் விஷயம் தொழுகையை விடுவதாகும்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான்..... ஹதீஸ் எண் 82)

இதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மூஃமின் என்பவர் தொழுகையில் பேணுதல் உள்ளவராவார். அதுவன்றி அவருக்கும் காஃபிருக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுபவரின் கூலியை இறைவன் – தொழுங்கள் என்று மட்டும் கூறாமல், ஜமாஅத்துடன் தொழுமாறும் உரிமை செலுத்தியவாறு நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறியுள்ளான். அதனால் ஓரிடத்தில் 25 மடங்கு நன்மை கிடைக்கும் என்றும் இன்னோரிடத்தில் 27 மடங்கு நன்மை கிடைக்கும் என்றும் வந்துள்ளது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அஸான்.... ஹதீஸ் எண் 645,646)

இருந்தும் கூட எந்தவொரு சரியான காரணமுமின்றி இதன் மீது நாம் கவனம் செலுத்தவில்லை எனில் அது நமது எத்தகைய துர்பேறாகும்?

நாம் பள்ளிவாயிலை உருவாக்கி இருக்கிறோம் எனில் மஸ்ஜிதுடைய உரிமையை நிறைவேற்றுவதும் அவசியமாகும். நாம் இபாதத்தின் தகுதியை உயர்த்துவதும் அவசியமாகும். நமது பொருளாதார தியாகத்தின் பக்கம் கவனம் செலுத்துவதும் அவசியமாகும். நாமும் நன்மை செய்வதும், நல்லொழுக்கத்தை மேம்படுத்துவதும், மற்றவர்களையும் அதற்காக வலியுறுத்துவதும் அவசியமாகும். இங்குள்ள சூழலில் தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதும், மற்றவரை தப்பிக்கச் செய்ய முயல்வதும் அவசியமாகும். அதுவன்றி நமது பைஅத் உடன்படிக்கை வாயளவானதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வழிகாட்டலை நினைவில் கொள்ள வேண்டும். அன்னார் கூறுகிறார்கள்:

நீங்கள் எவ்வாறு ஆக வேண்டும் எனில் இறைவனது விருப்பம் உங்கள் விருப்பமாகி விட வேண்டும். அவனது திருப்தி உங்கள் திருப்தியாகி விட வேண்டும். உங்களுடைய எதுவும் இருக்கக் கூடாது. எல்லாம் அவனுடையதாக ஆகி விட வேண்டும். இதுவே தூய்மையாகும். உள்ளத்திலிருந்து இறைவனுக்கு எதிரான கொள்கை மற்றும் செயல் அளவிலான அனைத்து விஷயங்களும் அகற்றப்பட வேண்டும். எனது விருப்பமே இவரது விருப்பமாக உள்ளது. எனது திருப்தியில் இவர் அர்ப்பணமாகி விட்டார் என்று இறைவன் தானே பார்க்காமல் உதவி செய்வதில்லை.

நான் ஜமாஅத்தின் அதிக எண்ணிக்கையைப் பார்த்து மகிழ்ச்சி அடையவில்லை. அப்போது அஹ்மதிகளின் எண்ணிக்கை நான்கு இலட்சம் என்று கூறி அதனை விட அதிகமாக இருப்பினும் உண்மையான ஜமாஅத் என்பது கையோடு கை வைத்து பைஅத் செய்ததல்ல. மாறாக ஜமாஅத் உண்மையாகவே ஜமாஅத் என்று கூறுவதற்கு எப்போது தகுதியானதாகும் எனில் பைஅத்தின் உண்மையில் நிலைத்து நிற்க வேண்டும். உண்மையான முறையில் தூய மாற்றம் உருவாக வேண்டும். அவர்களின் வாழ்வு பாவத்திலிருந்து தூய்மையடைய வேண்டும்.

மன எழுச்சிகள் கிளர்ச்சிகளிலிருந்து விலகி இறைவனது திருப்தியில் மாய்ந்து விட வேண்டும். அல்லாஹ்வின் உரிமை அடியாரின் உரிமைகளை முழுமையாக முழு உள்ளத்துடன் நிறைவேற்றுங்கள். மார்க்கத்திற்காகவும் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் ஒரு துடிப்பு உருவாக வேண்டும். தமது விருப்பங்கள் எண்ணங்கள் நாட்டங்களை அழித்து விட்டு இறைவனது பிடியில் வந்து விடுங்கள்.

இறைவன் கூறுகிறான்: நீங்கள் வழி தவறினீர்கள். நான் வழிகாட்டினேன். நீங்கள் குருடாக இருந்தீர்கள். ஒளி வழங்கினேன்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் எங்கிருந்தாலும் – வலிமை வாய்ந்த கோட்டைகளில் நீங்கள் இருந்தாலும் சரியே மரணம் வந்து உங்களைப் பிடித்துக் கொள்ளும். அவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் இது அல்லாஹ்விடமிருந்து வந்ததென்று கூறுகின்றனர். அவர்களுக்கு ஏதாவது தீமை ஏற்பட்டால் இது உம்மிடமிருந்து வந்ததென்று கூறுகின்றனர். (இவை) எல்லாமே அல்லாஹ்விடமிருந்து வந்தவை என்று நீர் கூறுவீராக. (4:79)

Faizal Hameed Ilahi, Tittacherry

நீங்கள் அனைவரும் இறந்தவர்கள். நான் எவருக்கு வாழ்வின் சர்பத்தை அருந்தத் தந்தேனோ அவரைத் தவிர அனைவரும் இறந்தவரே. மனிதனை இறைவனது திரையிடும் பண்பு மறைத்து வைத்துள்ளது. மனிதனின் உட்புற நிலைகளை உலகின் முன் எடுத்து வைத்தால், ஒருவர் மற்றவரின் அருகில் செல்வதையும் விரும்பாமல் போவது அருகில் உள்ளதாகும். இறைவனது திரையானது மறைத்து வைத்துள்ளது. மறைவில் உள்ளது. வெளி வந்தால் மற்றவருக்குத் தெரிய வந்தால் சிலர் சிலரது அருகில் கூட செல்ல மாட்டார்கள்.

அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் பெரும் குறைகளைத் திரையிடுபவன் ஆவான். மனிதனது குறைகளை ஒவ்வொருவருக்கும் அறியத் தருவதில்லை. எனவே மனிதன் செய்ய வேண்டியதாவது மனிதன் நன்மை செய்ய முயல வேண்டும். ஒவ்வொரு நேரமும் துஆவில் மூழ்கியிருக்க வேண்டும். நிச்சயமாக அறிந்து கொள்ளுங்கள். ஜமாஅத் மக்கள் மற்றும் மற்றவருக்கிடையில் உள்ள வித்தியாசம் இல்லை எனில் இறைவன் எவருக்கும் உறவுக்காரன் அல்ல. நாம் அஹ்மதியாகி விட்டோம். பைஅத் செய்து விட்டோம் என்பதற்காக மற்றவருக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லாத நிலையில் காப்பாற்ற இறைவன் எவருக்கும் உறவுக்காரன் அல்ல.

அவருக்கு கண்ணியம் ஏன் தர வேண்டும்? எல்லா தரப்பிலும் ஏன் பாதுகாக்க வேண்டும்? வித்தியாசம் எதுவும் இல்லை. பிறகு இறைவன் கண்டிப்பாக நமக்கு கண்ணியம் தந்தே ஆக வேண்டிய உறவுக்காரன் அல்ல. மற்றவருக்கு இழிவு தந்து நம்மை காப்பாற்றுவதற்கு என்ன தேவை? இறைவன் கூறி விட்டான்.

اِنَّمَا يَتَقَبَّلُ اللّٰهُ مِنَ الْمُتَّقِيْنَ

அதாவது இறையச்சமுடையவர் இறைவனுக்கு பயந்து இறை விருப்பத்திற்கு மாற்றமான விஷயங்களை விட்டு விடுகின்றனர். (5:28)

நஃப்ஸ் மற்றும் மன விருப்பங்கள், உலகம் மற்றும் உலகப் பொருட்களை இறைவனுக்கு முன் ஒன்றுமற்றதாகக் கருதுங்கள். ஈமானை சோதனையின்போது தெரிய முடிகிறது. சிலர் ஒரு காதில் கேட்டு மறு காதில் விட்டு விடுகின்றனர். அதனை உள்ளத்தில் இறக்குவதில்லை. எவ்வளவுதான் போதனை செய்தாலும் சரியே. அவர்களிடம் எந்தத் தாக்கமும் ஏற்படுவதில்லை.

நினைவில் கொள்ளுங்கள். இறைவன் பெரும் தன்னிறைவு பெற்றவன் ஆவான். அதிக அளவில் மனமுறுகி துஆ செய்யாதவரை அவன் பொருட்படுத்துவதில்லை. ஒருவரின் மனைவி மக்கள் நோயுற்றாலோ, ஒருவருக்கு கடும் அதிர்ச்சி ஏற்பட்டால் அதற்காக அவருக்கு என்ன ஒரு உணர்வுப் பிரவாகம் ஏற்படுகிறது. அதுபோன்று துஆவில் உண்மையான துடிப்பும் உணர்வு நிலையும் ஏற்படவில்லை எனில் அது தாக்கமற்ற வீணான செயலாகும். ஒப்புக் கொள்ளப்பட்ட மன்றாட்டம் அவசியமாகும். அவன் கூறியுள்ளான்:

اَمَّنْ يُّجِيْبُ الْمُضْطَرَّ اِذَا دَعَاهُ وَيَكْشِفُ السُّوْٓءَ (27:63)

திக்கற்றவரின் துஆவைக் கேட்பவன் யார்? அவர் இறைவனிடம் துஆ கேட்கிறார் எனில் அவன் அதனை ஏற்றுக் கொள்கிறான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 136,137)

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: நீங்கள் சீர்திருத்தம் பெற்றால் உங்கள் குடும்பத்தையும் அதில் இணையுங்கள். உங்கள் மனைவி மக்களை சீர்திருத்துவதும் அவசியமாகும். இறைவனது உதவி அத்தகையோருக்கே கிடைக்கிறது. அவர்கள் நன்மையில் எப்போதும் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். ஓரிடத்தில் நின்று விடுவதில்லை எனில் அவர்களுக்கே நல்ல முடிவு கிடைக்கிறது. சிலரை நாம் பார்த்திருக்கிறோம். அவர்களிடம் ஆர்வமும் துடிப்பும் தேம்பலும் உருக்கமும் காணப்படுகிறது. ஆனால் மேலே சென்று முற்றிலுமாக நின்று விடுகின்றனர். இறுதியில் நல்ல முடிவைப் பெறுவதில்லை.

அல்லாஹ் திருக்குர்ஆனில் இந்த துஆவைக் கற்றுத் தந்துள்ளான்:

وَاَصْلِحْ لِيْ فِيْ ذُرِّيَّتِيْ அதாவது எனது மனைவி மக்களையும் சீர்திருத்துவாயாக (46:16)

தமது நிலைமைகளில் தூய மாற்றமும் துஆவும் செய்வதுடன் தமது குழந்தைகளுக்காகவும் துஆ செய்ய வேண்டும். ஏனெனில் பெரும்பாலான குழப்பங்கள் குழந்தைகளால் ஏற்படுகிறது. பெரும்பாலானவை மனைவியால் ஏற்படுகிறது. முதல் குழப்பம் ஆதம் (அலை) அவர்களுக்கு பெண்ணால்தான் ஏற்பட்டது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு எதிரில் பல்அம் உடைய ஈமான் அழிந்ததற்குக் காரணம் பல்அம் உடைய மனைவிக்கு அரசன் சில நகைகளைத் தந்து பேராசை காட்டினான். இதனால் அவள் பல்அம் இடம் மூஸா (அலை) அவர்களுக்கு எதிரில் ஃபத்வா செய்யுமாறு தூண்டினான். சுருக்கமாக, பெண்களால் பெரும்பாலானவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எனவே அவர்களின் சீர்திருத்தத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக துஆ செய்ய வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 139)

அல்லாஹ் நமக்கு வாய்ப்பு வழங்குவானாக. நாம் நமது நிலைமைகளில் தூய மாற்றம் ஏற்படுத்துவோமாக. நமது தொழுகைகளை நிலைநாட்டி உயர் தரத்தை நிலைநாட்டுவோமாக. நமது பொருள்களை தூய்மைப்படுத்துவோமாக. நமது நல்லொழுக்கத்தை மேம்படுத்துவோமாக. நன்மைகளைச் செய்பவர்களாகவும் பரப்புபவர்களாகவும் ஆவோமாக.

தீமைகளிலிருந்து நம்மையும் சந்ததிகளையும் தடுப்பவர்களாக இருப்போமாக. மஸ்ஜிதின் கட்டுமானத்துடன் இஸ்லாத்தை இந்த நகரத்தில் பரப்புவர்களாகவும் ஆவோமாக. ஒரே இறைவனை வணங்குபவர்களாக அவர்களை ஆக்குவோமாக. நாம் நம்மிடம் உயர்ந்த மாற்றத்தை ஏற்படுத்தினால் மட்டுமே அது சாத்தியமாகும். அல்லாஹ் அதற்கான வாய்ப்பை வழங்குவானாக.

இப்போது இந்தப் பள்ளிவாயிலின் விபரங்களைக் கூறுகிறேன். இங்கு இப்பகுதி மஹ்தியாபாத் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஊரின் பெயர் நாஹே ஆகும். அங்குதான் இந்தப் பள்ளி கட்டப்பட்டுள்ளது. உள்ளூர் ஜமாஅத் உறுப்பினர்கள் மிகவும் குறைவாகத்தான் உள்ளனர்.

இந்த நிலம் விவசாய நிலம். 1989 –ல் வாங்கப்பட்டது. இதில் ஒரு பகுதியில் விவசாயம் நடக்கிறது. ஜமாஅத் குத்தகைக்கு விட்டுள்ளது. ஆரம்பத்தில் பண்ணை வீடு இருந்தது. அதனை மிஷன் ஹவுஸ் ஆகப் பயன்படுத்த அனுமதி கிடைத்தது. ஒரு பெரிய ஹால் இருந்தது. அதனை பள்ளிவாயிலாகப் பயன்படுத்த அனுமதி கிடைத்தது.

## திருக்குர்ஆனிலிருந்து...

ஏதேனும் நன்மை உமக்குக் கிடைத்தால் அது அல்லாஹ்விடமிருந்தே. மேலும் ஏதேனும் தீமை உமக்குக் கிடைத்தால் அது உம்மிடமிருந்தே. நாம் உம்மை மக்களுக்குத் தூதராக்கி அனுப்பியுள்ளோம். அல்லாஹ்வே (உமக்குப்) போதுமான சாட்சியாவான். (4:80)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

வகாரே அமல் மூலம் இப்பணிகள் நடந்தன. இதில் இரண்டு மாடிக் கட்டடம் உள்ளது. முரப்பி வீடும் இதில் உள்ளது. முதலிலேயே உருவாக்கப்பட்டது.

பிறகு 2010 –ல் கவன்ஸில், விவசாய நிலத்தின் ஒரு பகுதியை தங்குமிடமாக்க அனுமதி தந்தது. இவ்வாறு 12 பிளாட்டுகள் உருவாக்கப்பட்டன. 12 பிளாட்டுகளில் 2 பிளாட்டை மட்டும் ஜமாஅத் வைத்துக் கொண்டு மற்றவற்றை மக்களிடம் லீஸிற்கு விட்டது. அதனால் ஒரு தொகை கிடைத்தது. அல்லது அதற்கு முன் கவுன்ஸில் நிலத்தை திரும்ப வாங்கியதில் கிடைத்த தொகை சற்று அதிகமாகவே கிடைத்தது. எட்டு வருடங்களுக்கு முன் இதற்கு அடிக்கல் நாட்டினேன். இப்போது பள்ளிவாயில் முழுமை அடைகிறது. மஸ்ஜிது இரண்டு அடுக்கு உள்ளது.

இதன் மொத்த அளவு 350 முரப்பா ஆகும். 210 பேர் தொழும் இடம் உள்ளது. மேற்பகுதி ஆண்களுக்குரியது. பெண்களுக்கு கீழ்ப்பகுதி மஸ்ஜிது ஆகும். உளூ செய்யும் வசதியும் குளியலறை வசதிகளும் உள்ளன. கிட்டத்தட்ட 5 இலட்சத்து 60 ஆயிரம் யூரோ செலவில் கட்டப்பட்டது. இதில் 2 இலட்சம் யூரோவை விட அதிகமான தொகையை இங்குள்ள உள்ளூர் மக்கள் தந்தனர். மீதி தொகையை 100 பள்ளிவாயில்கள் கட்டும் திட்டத்தின் கீழ் தரப்பட்டது.

அல்லாஹ் இந்த எல்லா தியாகங்களையும் ஏற்றுக் கொள்வானாக. பொருள் தியாகம் செய்தவர்களின் பொருள்களிலும் உயிர்களிலும் பரக்கத் ஏற்படுத்துவானாக. இந்தப் பள்ளிவாயிலை கட்டிய பிறகு இபாதத்தின் உரிமையை முன்னரை விட அதிகமாக நிறைவேற்றுபவர்களாக ஆகுவோமாக.

**Love for All Hatred for None**
**எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு**

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வாகனத்திலிருந்து வெளியே வருகை தந்தவுடன், பிரான்ஸின் அமீர் மதிப்பிற்குரிய அஷ்ஃபாக் ரப்பானி சாஹிப் அவர்கள் தமது அன்பிற்குரியஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வரவேற்றார்கள். மேலும் ஹுஸூர் அவர்களுடன் முஸஃபா செய்யும் நற்பாக்கியத்தையும் பெற்றார்கள்.

பிறகு பிரான்ஸில் ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வரவேற்கவும், இங்குள்ள மற்ற ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வந்திருந்த குழுவில் பிரான்ஸின் அமீர் சாஹிப் மட்டுமின்றி, பிரான்ஸின் துணை அமீரான மதிப்பிற்குரிய அஸ்லாம் தோபரி சாஹிப், ஜெனரல் செகரட்டரி மதிப்பிற்குரிய ஃபஹீம் அஹ்மது நியாஸ் சாஹிப், MTA செயலர் மதிப்பிற்குரிய அய்ன் ஹாதி சாஹிப் , பிரான்ஸின் சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மதிப்பிற்குரிய ஜமீலுர் ரஹ்மான் சாஹிப், மதிப்பிற்குரிய அஸது இம்தியாஸ் சாஹிப் (நாயிப் சத்ர், சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, பிரான்ஸ்) மற்றும் முஹ்தமிம் உமூமி மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மதிப்பிற்குரிய இம்தியாஸ் இஃப்திஹார் சாஹிப் அவர்கள் தமது குத்தாம்களின் பாதுகாப்புக் குழுவுடன் வந்திருந்தார்கள்.

**தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றுங்கள்**

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**தொழுகையில் சோம்பேறித்தனம் காட்டுகின்ற மக்களைக் கொண்ட ஒரு கூட்டம் தென்படுவதை நான் காண்கிறேன். (அவர்களுள்) சிலர் முற்றிலும் தொழுவதே கிடையாது. சிலர் சோம்பேறிகளாக உள்ளனர். அவர்கள் அனைவரும் ஒழுங்காக ஆகிவிடுமாறும், சோம்பேறித்தனத்தை விட்டுவிட்டு தொழுகையை ஜமாஅத்தாகத் தொழுமாறும் நான் இப்போது அறிவிக்கின்றேன். எவர்கள் (இவ்வாறு) செயல்படுவதில்லையோ அவர்களுக்காக நாம் மூன்று மாதங்கள் காத்திருப்போம். அதன் பிறகு இரண்டு விஷயங்கள்தான் நடைபெறும்.**

**முதலாவதாக, திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸிலிருந்து தொழுகையை முறையாக தொழுவது அவர்களுக்குத் தேவையில்லை என்று அவர்கள் நிரூபிக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு நிரூபிக்கவில்லை என்றால், இன்ன இன்ன மக்கள் தொழுகையை ஜமாஅத்தாக தொழுவது அவர்கள் மீது கடமை இல்லை என்று நம் முன் நிரூபிக்கத் தவறியதன் காரணமாகவும், அவர்கள் (ஜமாஅத்தாக) அதை நிறைவேற்றத் தவறியதன் காரணமாகவும் அவர்கள் ஜமாஅத்தை விட்டு நீக்கப்பட்டு விட்டார்கள் என நாம் அறிவிப்புச் செய்வோம். முதல் அடியை அவர்கள் எடுத்து வைப்பார்கள். இரண்டாவத அடியை நாம் எடுத்து வைப்போம்.**

**(குத்பா ஜுமுஆ 13.11.1922)**

லுஹர் மற்றும் அஸர் தொழுகைகளை தொழுவதற்காக ஹோட்டலிலுள்ள ஒரு தனி அறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 2:35 மணிக்கு வெளியே வருகை தந்தார்கள். மேலும் லுஹர் மற்றும் அஸர் தொழுகையை ஜம்மு செய்தார்கள். தொழுகை மற்றும் உணவு சாப்பிட்ட பிறகு இங்கிருந்து ஹாலாந்திலுள்ள Nunspeet என்ற இடத்திற்கு செல்ல இருந்தோம்.

ஹாலாந்து ஜமாஅத்தின் அமீர் சாஹிப், மதிப்பிற்குரிய ஹிபத்துன் நூர் ஃபர்ஹாஹன் சாஹிப், மதிப்பிற்குரிய அப்துல் ஹமீத் சாஹிப் (துணை அமீர்), மதிப்பிற்குரிய நயீம் அஹ்மது சாஹிப் (முபல்லிக் இன்சார்ஜ், ஹாலாந்து), மதிப்பிற்குரிய முஸஃப்பர் ஹுஸைன் சாஹிப் (ஜெனரல் செகரட்டரி), மதிப்பிற்குரிய நாஸிர் அஹ்மது டோகர் சாஹிப், மதிப்பிற்குரிய சுபைர் அக்மல் சாஹிப் (செகரட்டரி தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸி), மதிப்பிற்குரிய உஸ்மான் அலி சாஹிப் (சத்ர் மஜ்லிஸ் குத்தாமும் அஹ்மதிய்யா) தமது பாதுகாப்புக் குழுவுடன் ஹோட்டலில் ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வரவேற்பதற்காக வந்திருந்தார்கள்.

பயண திட்டத்திற்கேற்ப வந்திருந்த குழு, இங்கிருந்து Nunspeet என்ற இடத்திற்கு எங்களை அழைத்துச் செல்ல வேண்டியதிருந்தது. 3:40 மணிக்கு ஹுஸூர் அவர்கள் ஹோட்டலில் இருந்து வெளியே வருகை தந்தார்கள். மேலும் கூட்டுத் துஆ செய்தார்கள். இதற்குப் பிறகு இந்த குழு ஹாலந்தின் Nunspeet என்ற இடத்தை நோக்கி புறப்பட்டது.

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் திருக்குர்ஆனை ஆழ்ந்து சிந்திக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவர்களிடமிருந்து வந்ததாக இருப்பின், நிச்சயமாக அவர்கள் இதில் பல முரண்பாடுகளைக் கண்டிருப்பர். (4:83)

**A.Basheer Ahmad, Melapalayam**

இங்கிருந்து Nunspeet 390 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. 55 கிலோமீட்டர் பயண தூரத்தை கடந்த பிறகு பிரான்ஸ் நாட்டின் எல்லையைக் கடந்து சென்று பெல்ஜியம் நாட்டின் எல்லைக்குள் நாங்கள் நுழைந்தோம். பெல்ஜியத்தில் 190 கிலோ மீட்டர் பயண தூரத்தை கடந்து பெல்ஜியத்தின் எல்லையைக் கடந்தவாறு ஹாலந்தில் நுழைந்தோம். மீண்டும் ஹாலாந்தில் ஏறக்குறைய 145 கிலோமீட்டர் பயணம் செய்து 8:5 மணிக்கு ஹுஸூர் அவர்கள் Nunspeet ஜமாஅத்தின் தலைமையகமான பைத்துன் நூர் என்ற இடத்திற்கு வருகை தந்தார்கள்.

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது வாகனத்தை விட்டு வெளியே வருகை தந்ததும் Nunspeet மற்றும் ஹாலந்தின் பல்வேறு ஜமாஅத்துகள் மற்றும் நகரங்களிலிருந்து வந்திருந்த ஜமாஅத்தின் ஆண் மற்றும் பெண் உறுப்பினர்கள் தமது அன்பிற்குரிய ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை மிகவும் எழுச்சியுடன் வரவேற்றார்கள். குழந்தைகள் பல்வேறு குழுக்களாக ஹுஸூர் அவர்களை வரவேற்றவாறு துஆக்கள் அடங்கிய நஸ்ம் பாடினார்கள். நாலா புறமும் அன்பின் ஓசைகள் முழங்கின.

அஹ்லன் வ சஹ்லன் மர்ஹபா யா அமீருல் முஃமினின் என்ற முழக்கம் எல்லா பக்கமும் ஒலித்தது.

மதிப்பிற்குரிய அமீர் சாஹிப், முபல்லிக் இன்சார்ஜ், Nunspeet முபல்லிக்கான மதிப்பிற்குரிய ஹாமிது கரீம் சாஹிப், வெளியுறவுத் துறை செயலர் மதிப்பிற்குரிய அஸ்கர் அலி நயீம் சாஹிப், மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் அஹ்மது சாஹிப் (அஃப்ஸர், ஜல்ஸா ஸாலானா ஹாலந்து) ஆகியோர் ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வரவேற்றார்கள்.

இந்த சந்தர்ப்பத்தின்போது Nunspeet-ன் துணை லார்ட் மேயர் Mr.Van De Berg அவர்களும் ஹுஸூர் அவர்களை வரவேற்பதற்காக வந்திருந்தார்கள். இதேபோன்று ஜமாஅத்தின் தலைமையகமான பைத்துன் நூரின் அருகே வசிக்கக்கூடிய Mr.Jaap அவர்களும் ஹுஸூர் அவர்களை வரவேற்பதற்காக வந்திருந்தார்கள். இவர் ஜெர்மனி இராணுவத்தின் மேஜர் ஆவார். இவர்கள் இருவருக்கும் ஹுஸூர் அவர்களை முஸஃபா செய்யும் நற்பேறு கிடைத்தது.

Nunspeet–ன் துணை லார்ட் மேயர் அவர்கள் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்:

மேயர் அவர்களும் வரவிருந்தது. ஆனால் ஒரு முக்கியமான மீட்டிங்கின் காரணமாக அவர்களால் வரமுடியவில்லை. ஆனால் சனிக்கிழமை நடக்க இருக்கின்ற நிகழ்ச்சியில் தாம் கலந்து கொள்வதாக அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த சந்தர்ப்பத்தின்போது ஜீஷான் என்ற ஒரு சிறுவன் ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு பூங்கொத்தை வழங்கினான். மேலும் நாஜியா அஸ்லம் என்ற ஒரு சிறுமி ஹுஸூர் அவர்களின் மனைவிக்கு பூங்கொத்தை வழங்கினார்கள்.

இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது கரங்களை உயர்த்தியவாறு அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி தமது இருப்பிடத்திற்கு சென்றார்கள்.

அன்பிற்குரிய ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வரவேற்பதற்காக ஹாலந்தின் பல்வேறு ஜமாஅத்துகளிலிருந்து ஆண்கள் மற்றும் பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள், சிறுவர்கள், சிறுமிகள் ஆகியோர் மதிய நேரத்திலிருந்தே ஜமாஅத்தின் தலைமையகமான பைத்துன் நூரை வந்தடைந்திருந்தனர். Nunspeet உள்ளூர் ஜமாஅத் மட்டுமல்லாமல் கீழ்க்கண்ட ஜமாஅத்துகளிலிருந்தும் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் பயணம் செய்து Nunspeet வந்திருந்தனர்.

| | |
|---|---|
| DEN HAAG | AMSTERDAM |
| UTRECHT | ZWOLLE |
| LIEDEN | ARNHEM |
| EINDHOVEN | ROTTERDAM |
| DENBOSCH | MAASTRICHT |
| GRONINGEN | LEUWAARDEN |

ஜமாஅத்தின் அனைத்து உறுப்பினர்களும் அன்பிற்குரிய இமாமின் வருகைக்கான காத்துக் கொண்டிருந்தனர். இவர்கள் அனைவருக்கும் ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களைப் பார்ப்பதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. இவர்கள் அனைவரும் இந்த வாழ்த்துக்குரிய அருளுக்குரிய நேரங்களிலிருந்து பயனடைந்தனர்.

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பைத்துன் நூர் பள்ளிவாசலுக்கு 8:30 மணிக்கு வருகை தந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது தங்குமிடத்திற்குச் சென்றார்கள்.

ஹாலந்தின் பல்வேறு ஜமாஅத்துகளிலிருந்து ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வரவேற்பதற்காக வந்திருந்த அனைத்து ஆண்களும், பெண்களும் ஹுஸூர் அவர்களுக்குப் பின்னால் நின்று தொழக்கூடிய நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். இவர்களில் சிலர் பாகிஸ்தானில் இருந்தும் வந்திருந்தனர். இது அவர்களுக்கு, தமது அன்பிற்குரிய தலைவருக்குப் பின்னால் நின்று தொழக்கூடிய முதல் தொழுகையாக இருந்தது. அவர்களுக்கு கிடைத்த இந்த நற்பாக்கியத்திற்காக அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் அவர்களுக்கு ஒரு புதிய வாழ்வு கிடைத்ததுபோல் இருந்தது. அல்லாஹ் இந்த பாக்கியத்தை நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆமீன்

Nunspeet லுள்ள ஜமாஅத்தின் தலைமையகமான பைஅத்துன் நூர் மிகவும் பெரிய இடத்தையும், கட்டடத்தையும் கொண்டது. இதன் அளவு கால் ஏக்கர் ஆகும். இதில் மூன்று பெரிய கட்டடங்கள் உள்ளன. மூன்று பிளாக்களைக் கொண்டதாக அது அமைந்துள்ளது.

முதல் பிளாக் மூன்று தளங்களைக் கொண்டதாகும். இதன் முதல் தளத்தில் ஒரு பெரிய அறை உள்ளது. அது 1985 முதல் 2014 வரை அதாவது ஏறக்குறைய 30 வருடங்களாக பள்ளிவாசலாக பயன்படுத்தப்பட்டு வந்தது. இதுமட்டுமன்றி, இந்த கட்டடத்தின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தளங்களில் 22 அறைகள் உள்ளன. இந்த அறைகள் ஒரு பெரும் எண்ணிக்கையைக் கொண்ட விருந்தினர்களுக்கு தங்குமிடமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் குளியலறையும், கிச்சனும் உள்ளன. லங்கர்

## திருக்குர்ஆனிலிருந்து...

நல்லவற்றிற்குப் பரிந்துரை செய்கின்றவர்க்கு அதில் ஒரு பங்கு உண்டு. தீயவற்றிற்குப் பரிந்துரை செய்கின்றவருக்கும் அதன் விளைவில் ஒரு பங்கு உண்டு. அல்லாஹ் எல்லாவற்றிற்கும் முழுமையான ஆற்றல் பெற்றவனாவான். (4:86)

M.Y. Shahul Hameed, Melapalayam

கானாவின் ஏற்பாடுகளும் இந்த கட்டடத்துடன் இணைந்துள்ளது. ஜமாஅத்தின் நூலகமும் இந்த கட்டடத்தில்தான் அமைந்துள்ளது.

இரண்டாவது பிளாக்கும் மூன்று தளங்களைக் கொண்டதாகும். முதல் இரண்டு மாடிகளில் மூன்று அறைகள் உள்ளன. மூன்றாவது தளத்தில் ஏழு விருந்தினர் அறைகள் உள்ளன. அதாவது தங்குவதற்கான Apartments.

மூன்றாவது பிளாக்கின் ஒரு பகுதி 2014 ஆம் ஆண்டு பள்ளியின் வடிவில் மாற்றப்பட்டது. முறையாக மிஹ்ராப் அமைக்கப்பட்டது. மேலும் இந்த பிளாக்கில் இரண்டு அலுவலகங்களும், ஒரு தங்குமிடமும் உள்ளன.

இந்த தலைமையகத்தில் மூன்று கட்டடங்கள் மட்டுமின்றி ஒரு பங்களாவும் உள்ளது. இது 1985 ஆம் ஆண்டு வாங்கப்பட்டது. Nunspeet என்ற இந்தப் பகுதி மிகவும் அழகுவாய்ந்ததாகும். மிகவும் அமைதி நிறைந்த பகுதியாகும்.

1985 ஆம் ஆண்டு இந்த இடம் வாங்கப்பட்டபோது Nunspeet ல் ஒரே ஒரு அஹ்மதி குடும்பம் மட்டும்தான் வசித்து வந்தது. Nunspeet ல் மெதுமெதுவாக ஜமாஅத்தின் எண்ணிக்கை அதிகரித்தது. 2014 ஆம் ஆண்டு Nunspeet ஜமாஅத் உறுப்பினர்களின் எண்ணிக்கை 155 ஐ கடந்தது. எனவே இதனை இரண்டு ஜமாஅத்துகளாக அதாவது Nunspeet மற்றும் Zwolle என்று பிரிக்கப்பட்டது.

அல்லாஹ்வின் அருளால் தற்போது இந்த ஜமாஅத் மிகவும் வேகமாக முன்னேற்றம் அடைந்து வருகின்றது. இப்போது Nunspeet ஜமாஅத் உறுப்பினர்களின் எண்ணிக்கை மட்டும் 140 ஐ விட அதிகமாகும். இதற்கு அருகில் இருக்கின்ற Zwolle ஜமாஅத் உறுப்பினர்களின் எண்ணிக்கை 90 ஐ விட அதிகமாகும்.

இந்த இரண்டு ஜமாஅத் மட்டுமின்றி நாட்டின் பல்வேறு ஜமாஅத்துகளைச் சார்ந்த மக்கள் இங்கு ஒன்று கூடியிருந்தார்கள். ஒரு பெருநாளைப் போன்று காட்சி அளித்தது. ஒவ்வொரு உள்ளமும் மகிழ்ச்சியால் நிரம்பி இருந்தது. இந்த நாட்கள் மிகவும் அருளுக்குரிய மற்றும் வாழ்த்துக்குரிய நாட்களாக இருந்தன.

**26 செப்டம்பர் 2019 (வியாழக்கிழமை)**

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் காலை 6:30 மணிக்கு பைத்துன் நூர் பள்ளிவாசலில் ஃபஜர் தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது தங்குமிடத்திற்கு சென்றார்கள். காலையில் ஹுஸூர் அவர்கள் அலுவலகப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள். பிறகு ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அவர்கள் 2 மணிக்கு பைத்துன் நூர் பள்ளிவாசலில் லுஹர் மற்றும் அஸர் தொழுகைகளை சேர்த்து தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது தங்குடத்திற்கு சென்றார்கள். மதிய வேளையிலும் ஹுஸூர் அவர்கள் அலுவலகப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

**குடும்ப உறுப்பினர்களுடனான சந்திப்பு**

6 மணிக்கு ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது அலுவலகத்திற்கு வருகை தந்தார்கள். பிறகு குடும்ப உறுப்பினர்களுடனான சந்திப்பு ஆரம்பமானது. 40 குடும்பங்களைச் சார்ந்த 174 நபர்கள் இன்றைய தினம் ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை சந்திப்பதற்கான நற்பேற்றைப் பெற்றார்கள். மேலும் இந்த அனைத்து குடும்பத்தினருக்கும் ஹுஸூர் அவர்களுடன் புகைப்படம் எடுக்கும் நற்பாக்கியமும் கிடைத்தது. ஹுஸூர் அவர்கள் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பேனாவை வழங்கினார்கள். மேலும் சிறிய வயதுடைய குழந்தைகளுக்கு சாக்லேட் வழங்கினார்கள்.

ஹுஸூர் அவர்களை சந்திக்க வந்திருந்த குடும்ப உறுப்பினர்களில் Nunspeet ஜமாஅத் மட்டுமின்றி Almere, Rotterdam, Zwolle, Eindhoven, Den Haag, Denbosch, Utrecht

ஜமாஅத்தின் உறுப்பினர்களும் வந்திருந்தனர்.

ஹுஸூர் அவர்களை சந்திக்க வந்திருந்த இந்த குடும்ப உறுப்பினர்களில் ஏறக்குறைய அனைவருமே, அல்லது பெரும்பான்மை எத்தகையவர்கள் என்றால், இவர்கள் தமது வாழ்க்கையில் முதல் முறையாக தங்கள் அன்பிற்குரிய தலைவரை சந்திப்பதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள். இன்றைய நாள் அவர்களின் வாழ்நாளில் மிகவும் அருளுக்குரிய மற்றும் வாழ்த்துக்குரிய மற்றும் அல்லாஹ்வில் அருட்களால் நிறைந்திருந்தது.

இந்த சந்திப்பின் ஒவ்வொரு நொடியையும் இவர்களும் இவர்களது குழந்தைகளும் எப்போதும் நினைவில் வைத்திருப்பர். காலத்தின் கலீஃபாவுடனான நெருக்கத்தின் இந்த சிறிய நேரமானது இவர்களது முழு வாழ்க்கையையும் ஒளியூட்டக் கூடியதாக ஆகி விட்டது. மனிதர்களின் வாழ்நாளில் சில தருணங்கள் எத்தகையதாக இருக்கின்ற என்றால் அது அவர்களது வாழ்க்கையையே மாற்றி விடுகின்றது. அதுபோன்றுதான் அன்பிற்குரிய தலைவரின் இந்த நெருக்கத்தின் சில நிமிடங்கள் அவர்களது மார்க்கத்தையும் சீர் செய்து விடுகின்றது. மேலும் அவர்களது உலகையும் சீர் செய்து விடுகின்றது. மேலும் அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையை அது வழங்குகின்றது.

(உருது பத்ர், 24,31 அக்டோபர் 2019)

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*

**காதியான் ஆண்டு மாநாடு தொடர்பான முக்கிய அறிவிப்பு**

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் காதியான் ஆண்டு மாநாடு தொடர்பாக, இது 125 வது ஆண்டு மாநாடு என்று பத்ர் பத்திரிகையில் அறிவிப்பு செய்யப்பட்டு வந்தது. இந்த வரலாற்று சிறப்புமிக்க மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் சில குறிப்பான நிகழ்ச்சிகளுக்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். இது தொடர்பான தகவலை சுற்றறிக்கை மூலமாக ஜமாஅத்திற்கும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ''தாரீகே அஹ்மதிய்யத்'' காதியான் துறையின் ஆய்வின் அடிப்படையில், **2019 ஆம் ஆண்டு நடைபெறும் ஆண்டு மாநாடு 125 வது ஆண்டு மாநாடு அல்ல. மாறாக 126 வது ஆண்டு மாநாடாகும்** என்ற தகவல் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் மிகுந்த பரிவுடன் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். மேலும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கான வழிகாட்டலை வழங்கியுள்ளார்கள்.

(செயல் தலைவர், நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா)

**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்களுக்கு யாரேனும் நல்வாழ்த்துத் தெரிவித்தால் அதனை விடச் சிறந்த முறையில் வாழ்த்துக்கள் அல்லது (குறைந்தது) அதனையே திருப்பிக் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் கணக்கெடுப்பவனாவான். (4:87)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 28 November 2019 Issue No. 48

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

**25 செப்டம்பர் 2019 (புதன்கிழமை)**

## இஸ்லாமாபாத் டெல்ஃபோர்டிலிருந்து ஹாலந்திலுள்ள பைத்துன் நூர் பள்ளிவாசலுக்கு ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அவர்களின் வருகை

இந்த சுற்றுப்பயணம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் புதிய தலைமையகமான லண்டனிலுள்ள இஸ்லாமாபாதிலிருந்து இரண்டாவது முறையாக ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மேற்கொண்டதாகும். ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஹாலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு பயணத்தை மேற்கொள்வதற்காக பயண திட்டத்திற்கேற்ப காலை 9:50 மணிக்கு தமது தங்குமிடத்திலிருந்து வெளியே வருகை தந்தார்கள். ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வழியனுப்பி வைப்பதற்காக காலையிலிருந்து எண்ணற்ற ஆண்களும் பெண்களும் ஒன்றுகூடி இருந்தார்கள்.

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் சிறிது நேரம் வரை ஜமாஅத் உறுப்பினர்களுக்கிடையே இருந்தார்கள். ஒவ்வொருவரும் ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை சந்திப்பதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றனர். பிறகு ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூட்டுத் துஆ செய்தார்கள். பிறகு தமது கரங்களை உயர்த்தியவாறு அங்கிருந்த அனைவருக்கும் “அஸ்ஸலாமு அலைக்கும்” என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு ஐந்து வாகனங்களைக் கொண்ட இந்த குழு லண்டனிலிருந்து Dover என்ற நகரத்தை நோக்கி புறப்பட்டது.

Dover லண்டனின் ஒரு புகழ்பெற்ற துறைமுகமாகும். லண்டன் மற்றும் அதற்கு அருகிலுள்ள பகுதிகளில் வசிக்கக்கூடிய மக்கள் ஐரோப்பாவிற்கு பயணம் செய்வதற்காக இந்த துறைமுகத்திலிருந்தே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

Dover நகரத்திலிருந்து ஏறக்குறைய 11 மைல் தொலைவிலுள்ள Folkstone என்ற இடத்தில் ஒரு பிரசித்திப்பெற்ற Channel Tunnel உள்ளது. அது லண்டனிற்கும், பிரான்ஸிற்கும் இடையிலுள்ள கடல் பகுதிகளை ஒன்றோடு ஒன்று இணைக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்த சுரங்கப்பாதையின் வழியாக கார்கள் மற்றும் இதர வாகனங்கள் இரயில்கள் மூலமாக பிரான்ஸின் Calais என்ற நகரம் வரை கொண்டு செல்லப்படுகிறது. இந்த சுரங்கப்பாதை வழியாகவே நமது பயணத்திற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

லண்டனிலுள்ள இஸ்லாமாபாதிலிருந்து யூ,கே வின் துணை அமீர் மதிப்பிற்குரிய மன்ஸூர் அஹ்மது ஷா சாஹிப், யூ.கே வின் முபல்லிக் இன்சார்ஜ் மதிப்பிற்குரிய அதாவுல் முஜீப் ராஷித் சாஹிப், மதிப்பிற்குரிய முபாரக் அஹ்மது ஜஃபர் சாஹிப் (அடிஷனல் வகீலுல் மால்), மதிப்பிற்குரிய நாஸிர் இனாம் சாஹிப் (Prinicipal, Jamia Ahmadiyya UK), மதிப்பிற்குரிய அஹ்லாக் அஹ்மது அஞ்சம் சாஹிப் (வகாலத்தே தப்ஷீர்), மதிப்பிற்குரிய நாயிப் சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா யூ.கே மேலும் முஹ்தமிம் உமூமி (மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா யூ.கே) அவர்கள் தமது பாதுகாப்புக் குழுவுடன் ஹுஸூர் அவர்களை வழியனுப்பி வைப்பதற்காக பயணக் குழுவுடன் Channel Tunnel வந்திருந்தனர். பிறகு இவர்கள் தமது அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களை வழியனுப்பி வைத்தார்கள்.

இதற்குப் பிறகு Emigration மற்றும் பயணம் தொடர்பான நடவடிக்கைகள் முழுமை செய்யப்பட்ட பிறகு சிறிது நேரம் ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் முக்கியஸ்தர்கள் தங்கிருயிருக்கின்ற இடத்திற்கு வருகை தந்தார்கள். ஏறக்குறைய 12:15 மணிக்கு பயணக்குழுவின் வாகனங்கள் இரயில் ஏற்றப்பட்டது. 12:30 மணிக்கு இரயில் புறப்பட்டது. மணிக்கு 140 கிலோமீட்டர் வேகத்தில் பிரான்ஸின் Calais நகரத்தை நோக்கி சென்றது.

இந்த சுரங்கப்பாதையின் நீளம் 31 மைல் ஆகும். இதில் 24 மைல் கடலுக்கு மிகவும் கீழ்ப்பகுதியில் உள்ளது. இந்த சுரங்கப்பாதையின் ஆழம் கடலில் இருந்து 75 மீட்டர் அதாவது 250 ஃபிட் கீழே உள்ளது.

கடலுக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள Tunnel ல் இதுவே உலகத்திலுள்ள மற்ற எல்லா Tunnel களை விடவும் மிகவும் பெரியதாகும். ஏறக்குறைய அரை மணி நேர பயணத்திற்குப் பிறகு பிரான்ஸின் உள்ளூர் நேரப்படி மதியம் 2 மணிக்கு பிரான்ஸின் நகரமான Calais ஐ நாங்கள் சென்றடைந்தோம். லண்டன் நேரத்தை விட பிரான்ஸின் நேரம் ஒரு மணி நேரம் அதிகமாகும்.

இரயில் நின்ற பிறகு ஏறக்குறைய ஐந்து நிமிட இடைவெளியில் பயணக்குழுவின் வாகனங்கள் வெளியில் கொண்டு வரப்பட்டன.

பயண திட்டத்திற்கேற்ப இங்கிருந்து சில கிலோ மீட்டர் தொலைவிலுள்ள Petrol Bulk அருகில் இருக்கின்ற Parking Area வில் பிரான்ஸிலிருந்து வந்திருந்த குழுவினர் ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வரவேற்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த இடத்தைக் கடந்த பிறகு வேறு எந்த இடத்திலும் நிற்காமல் பயணம் தொடர்ந்தது.

பிறகு வாகனங்களில் பயணம் செய்தவாறு சில கீலோ மீட்டர் தொலைவிலுள்ள Coquelles என்ற இடத்தில் அமைந்துள்ள The Orignals Human Hotel & Resort ல் லுஹர் மற்றும் அஸர் தொழுகைகள் தொழப்பட்டது. அதற்குப் பிறகு மதிய உணவிற்கான ஏற்பாட்டை பிரான்ஸ் ஜமாஅத் செய்திருந்தது. 2:20 மணிக்கு இங்கு வந்தோம்.

*(தொடர்ச்சி 9 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press, Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad